செ.வெ.எண்:36 நாள்: 12.01.2022

**பத்திரிக்கைச் செய்தி**

2022-ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் போது சமூக மற்றும் நல்லினக்கத்திற்காக "கபீர் புரஸ்கார் விருது" ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. இவ்விருதானது மூன்று அளவுகளில் தலா ஒரு நபர் வீதம் மூவருக்கு வழங்கப்படுகிறது. முறையே ரூ. 20,000/-, ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/- க்கான காசோலை மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும் தமிழகத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் (ஆயுதப்படை வீரர்கள், காவல் தீயணைப்புத்துறை மற்றும் அரசு பணியாளர்கள் நீங்கலாக அவர்களின் சமூதாய நல்லிணக்க செயல் அவர்கள் ஆற்றும் அரசுப் பணியில் ஒரு பகுதியாக நிகழும் பட்சத்தில் இப்பதக்கத்தினைப் பெற தகுதியுடையவராவர்.

இவ்விருதானது ஒரு சாதி, இனம், வகுப்பு சார்ந்தவர்கள் பிற சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது உடைமைகளையோ வகுப்பு கலவரத்தின்போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பற்றியது வெளிப்படையாக தெரிகையில் அவரது உடல் மற்றும் மன வலிமையை பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது. எனவே தகுதியான விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர்வளாகத்தில் இயங்கும் மாவட்ட சமூகநல அலுவலகம், அரை எண்:20-தரைத்தளம், அரியலூர் முகவரில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**